வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 01.05.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- 10 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 93 தொகுதிகளில், மூன்றாம் கட்ட மக்களவைத் தேர்தல், வரும் 7 ஆம் தேதி நடைபெற உள்ளது.
- இன்று மகாராஷ்டிரா மாநிலத்தின் உதய நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள், அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல், 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இந்திய கடற்படையின் துணைத் தலைவராக, வைஸ் அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன், இன்று பொறுப்பேற்றுள்ளார்.

<u>தேர்தல் (10)</u>

10 மாநிலங்கள், மற்றும், 1 யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 93 தொகுதிகளில், மூன்றாம் கட்ட மக்களவைத் தேர்தல், வரும் 7 ஆம் தேதி நடைபெற உள்ளது. குஜராத் மாநிலத்தின் 25 தொகுதிகளும், கர்நாடகா 14, மகராஷ்டிரா 11 உத்திரபிரதேஷ் 10, மத்திய பிரதேஷ் 9, சட்டீஸ்கர் 7, பீகார் 5, அசாம் 4, மேற்கு வங்கம் 4, மற்றும், கோவா மாநிலத்தின் 2 தொகுதிகளும் இதில் அடங்கும். மூன்றாம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக, வரும் 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள, குஜராத் மாநிலம் பனஸ்காந்தா தொகுதியில், பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். இன்று மாலை குஜராத் மாநிலம் சாபர்காந்தா தொகுதியிலும், அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

தேர்தல் சேர்க்கை (5)

இதற்கிடையே, முதல் 2 கட்ட மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளின் சதவிகித விவரங்களை, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இதன்படி, 102 தொகுதிகளுக்கான முதல் கட்ட மக்களவை தேர்தலில், 66.14 சதவிகித வாக்குகளும், 88 தொகுதிகளுக்கான இரண்டாம் கட்ட மக்களவை தேர்தலில் 66.71 சதவிகித வாக்குகளும் பதிவாகி உள்ளன.

*பிரியங்கா* (16)

மூன்றாம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக, வரும் 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள, அசாம் மாநிலம் துப்ரி தொகுதியில், மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, இன்று, தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், நலிவடைந்த பிரிவை சேர்ந்த பெண்களுக்கு, ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாயும், அரசு வேலை வாய்ப்பில் 50 சதவிகித இட ஒதுக்கீடும் வழங்கப்படும் என, அவர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் வேலை வாய்ப்பின்மை அதிகரித்து விட்டதாகவும், 70 கோடி பேர் வேலையின்றி தவிக்கும் நிலையில், 20 லட்சம் மத்திய அரசுப் பணியிடங்கள் காலியாகவே வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், வேளாண் விளை பொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்திரவாதம் அளிக்கப்படும் என்றும், நிலமற்ற விவசாயிகளுக்கு, நிலம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி ஆகியோர், நாளை கர்நாடகத்தில், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளனர்.

*மனு தாக்கல்* (16)

ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக, வரும் 25 ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ள. உத்திரபிரதேஷ் மாநிலம் சுல்தான்பூர் தொகுதியில், மூத்த பிஜேபி தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திருமதி மேனகா காந்தி, இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். மூத்த பிஜேபி தலைவர்கள் சாத்வி நிரஞ்ஜன் ஜோதி, ஃபத்தேபூர் தொகுதியிலும், திரு ஜகதம்பிகா பால், துமாரியாகஞ்ச் தொகுதியிலும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். பஸ்தி தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு ஹரீஷ் துவிவேதி நடத்திய மனு தாக்கல் பேரணியில் மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கலந்து கொண்டார். இதற்கிடையே, டெல்லியின் வடகிழக்கு டெல்லி தொகுதியில், பிஜேபி

வேட்பாளர் திரு மனோஜ் திவாரி இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், டெல்லியில் அனைத்து 7 மக்களவை தொகுதிகளிலும், பிஜேபி வெற்றி பெறும் என்றார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், இன்று உத்திரபிரதேஷ் மாநிலம் இட்டாவா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் பிஜேபி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அரசியல்சாசனத்தை மாற்றி விடும் என்று அவர் கூறினார்.

மகாராஷ்டிரா (18)

இன்று மகாராஷ்டிரா மாநிலத்தின் உதய நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். மகராஷ்டிர மக்கள், நாட்டின் வளர்ச்சிக்கு, தொடர்ந்து முக்கிய பங்களித்து வருவதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். சத்ரபதி சிவாஜி மகராஜ் பிறந்த பூமியான மராட்டிய மாநிலம், ஜோதிபாய் ஃபுலே, சாவித்திரிபாய் ஃபுலே, தாராபாய் ஷிண்டே, பாபா சாகேப் அம்பேத்கர் போன்ற மாபெரும் ஆளுமைகளையும் நாட்டிற்கு அளித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பூகோள ரீதியிலான பன்முகத் தன்மை, கலாச்சார வளம் மற்றும் பொருளாதார திறன்களால், தனிச்சிறப்புடன் திகழும் மாநிலம் மகராஷ்டிரா என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கூறியுள்ளார். கலாச்சார செழிப்பும், மாபெரும் தொலை நோக்கு தலைவர்களை நாட்டிற்கு வழங்கிய சிறப்பும் கொண்ட மகராஷ்டிர மாநிலத்தின் பெருமைகளை கொண்டாடும் நாளே, உதய தினம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். ஒற்றுமை, பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தின் சுடராகவே மராட்டிய மாநிலம் திகழ்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி (9)

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல், இதுவரை இல்லாத உயரளவில், 2 லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாயாக பதிவாகி உள்ளது. கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், இது, 12.4 சதவிகிதம் அதிகமாகும். உள் நாட்டு அளவிலான வர்த்தகப் பரிவர்த்தனைகளும், இறக்குமதியும், வலுவாக அதிகரித்ததே இதற்கு காரணம் என்று, மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. திருப்பி அளிக்கப்பட வேண்டிய ஜிஎஸ்டி போக, நிகர ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 92 ஆயிரம் கோடி ரூபாய்

என்றும், இது, கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், 15.5 சதவிகிதம் அதிகம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடற்படை (7)

இந்திய கடற்படையின் துணைத் தலைவராக வைஸ் அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து, புதுடெல்லியில் உள்ள தேசிய போர் வீரர் நினைவு சின்னத்திற்கு, அவர் நேரில் சென்று நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்பு படையினருக்கு மலரஞ்சலி செலுத்தினார். 1987 ஆம் ஆண்டு இந்திய கடற்படையில் சேர்ந்த திரு கிருஷ்ண சுவாமிநாதன், தொலைதொடர்பு மற்றும் மின்னணுப் போர் முறைகளில் நிபுணராவார்.

ஏவுகணை (9)

ஒலியை விட அதிக வேகத்தில், கடலுக்கு அடியிலேயே செலுத்தப்பட்டு, நீர்மூழ்கிக் கப்பல்களை தாக்க வல்லதாக, டிஆர்டிஓ விஞ்ஞானிகளால் உருவாக்கப் பட்டுள்ள, இந்தியாவின் அதி நவீன நீர்மூழ்கி ஏவுகணை, இன்று ஒடிசா கடற்கரைக்கு அப்பால், டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து, வெற்றிகரமாக ஏவிப் பரிசோதிக்கப்பட்டது. இதற்கென, டிஆர்டிஓ விஞ்ஞானிகள், மற்றும், தொழில்துறை சார்ந்த கூட்டாளிகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வாழ்த்து தெரிவித்துள்ளார். ஸ்மார்ட் என்னும் இந்த டார்பிடோ ஏவுகணையால் இந்திய கடற்படையின் வலு இன்னும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

டெல்லி புரளி (11)

டெல்லி தலைநகரப் பிரதேசத்தில் இன்று காலை பல பள்ளிகளில், மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் பெறப்பட்டதை தொடர்ந்து, மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, போலீசார் மூலம் முழுமையான தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், வெடிகுண்டு எதுவும் கிடைக்கவில்லை. காவல் துறை, மற்றும், சம்பந்தப்பட்ட பள்ளிகளை, டெல்லி அரசு, தொடர்ச்சியான முறையில் தொடர்பு கொண்டு வருவதாக டெல்லி கல்வி அமைச்சர் திருமதி அத்திஷி தெரிவித்துள்ளார். வெடிகுண்டு புரளி குறித்து டெல்லி துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா, டெல்லி

காவல் துறையிடம் அறிக்கை கோரியுள்ளார். புரளி கிளப்பிய விஷமிகள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

செய்தி (8)

மூத்த இந்திய தகவல் பணி அதிகாரி திருமதி மௌஷ்மி சக்ரவர்த்தி, ஆகாஷ்வாணி செய்திப் பிரிவின் தலைமை இயக்குநராக இன்று பொறுப்பேற்றுள்ளார். இதுவரை, முதன்மை தலைமை இயக்குநராக இருந்த திருமதி வசுதா குப்தா, நேற்று ஓய்வு பெற்றதை தொடர்ந்து, பொறுப்பு, திருமதி சக்ரவர்த்தியிடம் வழங்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கும் மேல் அனுபவம் உள்ள திருமதி மௌஷ்மி சக்ரவர்த்தி, ஏற்கனவே, பத்திரிக்கை தகவல் அலுவலகம் உட்பட, தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு ஊடகப் பிரிவுகளில் பணியாற்றி உள்ளார்.

வானிலை (14)

வடதமிழகத்தின் உள் மாவட்டங்களில், வரும் 3 ஆம் தேதி வரை, வெப்ப அலை வீசக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்ச வெப்பநிலை, 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயர்ந்து, வரும் 3-4 ஆகிய தேதிகளில், 2 டிகிரி செல்சியஸ் வரை குறையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வெப்பநிலை, 39 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகலாம் என்றும், தமிழக மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது, ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கரூர் பரமத்தியில், 42.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. குமரி மாவட்டம் குளச்சல், திற்பரப்பு உள்ளிட்ட இடங்களில் தலா 3 சென்டி மீட்டர், மற்றும் தென்காசியில் 2 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

இந்த 3 ஆம் கட்டத்தில், 94 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுவதாக இருந்த போதிலும், மத்திய பிரதேஷ் மாநிலம் பேட்டுல் தொகுதியில் தேர்தல் 3 ஆம் கட்டத்திற்கு மாற்றப்பட்டதாலும், குஜராத் மாநிலம் சூரத் தொகுதியில் பிஜேபி வேட்பாளர் போட்டியின்றி தேர்வு, மற்றும், ஜம்மு காஷ்மீரின் அனந்தநாக் தொகுதியில் வாக்குப்

பதிவு தேதி மாற்றப்பட்டதாலும், 3 ஆம் கட்ட தேர்தலுக்கான தொகுதிகளின் எண்ணிக்கை, 93 ஆக குறைந்துள்ளது.

இந்த 3 ஆம் கட்ட தேர்தலுடன் சேர்த்து, அனைத்து வடகிழக்கு மாநிலங்கள் உட்பட 16 மாநிலங்களிலும், 4 யூனியன் பிரதேசங்களிலும் தேர்தல் முடிவடைகிறது.

ஐபிஎல் (6)

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை-பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு, லக்னோ-மும்பை அணிகளுக்கு இடையே லக்னோவில் நடைபெற்ற போட்டியில், லக்னோ அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியை தொடர்ந்து லக்னோ அணி, புள்ளி பட்டியலில் 5 ஆவது இடத்தில் இருந்து, 3 ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

வெளிநாட்டு கட்சி (8)

பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரச்சார உத்திகள் மற்றும் இந்திய தேர்தல் நடைமுறைகள் குறித்து நேரில் அறிந்து கொள்வதற்காக, கட்சி அழைப்பின் பேரில் தற்போது இந்தியா வந்துள்ள, 18 வெளிநாட்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், இன்று புதுடெல்லியில் பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, மத்திய அமைச்சர்கள் டாக்டர் ஜெய்சங்கர், திரு அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோரை சந்தித்தனர். இந்த 18 அரசியல் கட்சிகள், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், இலங்கை, இஸ்ரேல், ரஷ்யா, உகாண்டா, தான்சானியா, வியட்நாம் உள்ளிட்ட 10 வெளிநாடுகளை சேர்ந்தவை ஆகும்.